# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஏப்ரல் 4, 2022 Weekly E-paper ● April 4, 2022




## ஏப். 14 - நீட் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

## ஏப். 29 - கருஞ்சட்டை விருது வழங்கும் விழா

### அவரது ஓட்டம் அனைவர்க்கும் ஊக்கம்!

சுப. வீரபாண்டியன்

### அங்கே சாமியார், இங்கே பெரியார்!

தலையங்கம்

### மாநிலக் கட்சிகள் பலம் பெறுவது திராவிட மாடலே!

சிற்பி செல்வராஜ்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஏப்ரல் 4, 2022 Weekly E-paper ● April 4, 2022


# ஏப். 14 - நீட் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்
# ஏப். 29 - கருஞ்சட்டை விருது வழங்கும் விழா

## திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் செயற்குழுவில் தீர்மானம்

02.04.2022 ஆம் நாள் காலை, திருச்சியில் நடைபெற்ற பேரவையின் செயற்குழுவில் 74 செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அவைத்துணைத் தலைவர் பொள்ளாச்சி மா உமாபதி தலைமையில், பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் கருத்துரையின் பின் மாநில செயற்குழு உறுப்பினர்களால் கீழ்க்காணும் தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டன.


### தீர்மானம் 1:

நீட் தேர்வின் தீமைகளை உணர்ந்து, அந்தத் தேர்வு தமிழகத்திற்குத் தேவையில்லை என்பதை ஒருமுறைக்கு இரண்டு முறைகள் தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசின் ஒப்புதலுக்குத் தமிழ்நாடு அரசு அனுப்பியுள்ளது. ஆனால் தமிழ்நாட்டின் ஆளுநர் ரவி அவர்கள், எதேச்சதிகாரமாக அந்தத் தீர்மானத்தை ஒன்றிய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பாமல், காலம் தாழ்த்தி வருவது வருத்தத்திற்குரியதும், கண்டனத்திற்கு உரியதும் ஆகும். நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்க வலியுறுத்தியும், ஆளுநரின் சர்வாதிகாரப் போக்கினைக் கண்டித்தும், எதிர்வரும் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளான ஏப்ரல் 14ஆம் தேதி, சென்னையில் ஓர் ஆர்ப்பாட்டம் நடத்துவது என இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

### தீர்மானம் 2:

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் அவர்களின் பிறந்தநாளான ஏப்ரல் 29 அன்று திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பில் திராவிட இயக்க வளர்ச்சிக்காக நீண்ட நாள்களாக செயல்பட்டு வரும் 3 மூத்த முன்னோடிகளுக்கு "கருஞ்சட்டை விருதும்" ரூபாய் ஒரு லட்சம் நிதியும் வழங்குவது என்று முடிவெடுத்து, அதன்படி திராவிடர் கழகத்தின் துணைத் தலைவர் மானமிகு கவிஞர் கலி.பூங்குன்றனார் அவர்களுக்கும் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொருளாளரும், தலைசிறந்த பவுத்த அறிஞருமான தோழர் எழில் இளங்கோவன் அவர்களுக்கும், திராவிட முன்னேற்ற கழகத்தில் வெளியில் தெரியாத வேர் போலத் தொடக்க நாள் தொட்டு தொண்டாற்றி வருபவரும் மூத்த தொண்டருமான அய்யா கொளத்தூர் சின்னராசு அவர்களுக்கும் வழங்குவது என செயற்குழு முடிவு எடுத்துள்ளது.

**விருது பெறும் மூத்த முன்னோடிகள்**


**மானமிகு கலி.பூங்குன்றன்**
துணைத்தலைவர், திராவிடர் கழகம்

**தோழர் எழில்.இளங்கோவன்**
பொருளாளர், திராவிட இயக்கத் தமிழர் பேரவை

**கொளத்தூர் சின்னராசு**
திராவிட இயக்கச் செயற்பாட்டாளர்

### தீர்மானம் 3

ஏப்ரல் 14 முதல் ஏப்ரல் 30 வரை தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் கொடியினை ஏற்றி வைத்துக் கொள்கைப் பரப்புரை செய்வது என இச்செயற்குழு முடிவெடுத்துள்ளது.

### தீர்மானம் 4:

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் அவர்கள் பிறந்த ஏப்ரல் 29ஆம் நாளை பேரவை நாளாக நாம் ஆண்டுதோறும் கொண்டாடுவது வழக்கம். அந்நாளில் பேரவைத் தோழர்களிடம் இருந்து பேரவை நாள் நிதியைப் பெற்று செயல்பட்டு வருகிறோம். அவ்வகையில் இந்தப் பேரவை நாளினையொட்டியும், ஏப்ரல் 20 முதல் 30 வரை பேரவைத் தோழர்கள் அனைவரும் தங்களால் இயன்ற ஒரு நிதியினை பேரவைக்கு வழங்க வேண்டும் என்றும் அனைத்து நிலைகளிலும் உள்ள பேரவை நிர்வாகிகள் அவர்களோடு தொடர்பில் உள்ள அனைத்துப் பேரவைத் தோழர்களிடமும் எடுத்துச்சொல்லி பேரவை நிதியினைப் பெருந்தொகையாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது. ●



பொதுச் செயலாளர் உரை நிகழ்த்துகிறார்


அவைத்துணைத் தலைவர் பொள்ளாச்சி மா. உமாபதி தலைமையுரை


துணைப் பொதுச் செயலாளர் ஆ.சிங்கராயர்


துணைப் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ்


முதன்மைச் செயலாளர் புலேந்திரன்


அமைப்புச் செயலாளர் காசு. நாகராஜன்

# அவரது ஓட்டம் அனைவர்க்கும் ஊக்கம்!

**சுப. வீரபாண்டியன்**

எண்பது வயது தாண்டிய ஒருவரை, வெளியில் போகும்போது கைபிடித்து அழைத்துச் செல்வதுதான் இயல்பு. ஆனால் 88 வயதைக் கடந்த ஒருவர், எல்லோரையும் கைபிடித்து அழைத்துச் செல்லும் அதிசயம் இப்போது தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது!



அந்த அதிசயத்தை நிகழ்த்திக் கொண்டிருப்பவர், திராவிடர் கழகத்தின் தலைவர், ஆசிரியர் கி. வீரமணி அவர்கள். வரும் டிசம்பர் மாதம் அவர் தன் 90 ஆவது அகவையில் அடியெடுத்து வைக்கின்றார். ஆனால் அவர்தான் இப்போது தமிழ்நாடு முழுவதும் சுற்றிவந்து தங்கள் கொள்கைகளைப் பரப்புவதற்குப் பம்பரமாய்ச் சுழன்று கொண்டிருக்கிறார்.

ஏப்ரல் 3 ஆம் தேதி, நாகர்கோயிலில் தன் பயணத்தைத் தொடங்கிய அவர், வரும் 25 ஆம் தேதி சென்னையில் அதனை நிறைவு செய்கிறார். தொடக்கி வைத்தவர், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி. முடித்து வைக்க இருப்பவர் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர்!

ஒவ்வொரு நாளும் இரண்டிரண்டு ஊர்களில் பொதுக்கூட்டங்கள்! இடையில் மக்களோடும், தொண்டர்களோடும் சந்திப்பு. இடைவிடாத படிப்பு, எழுத்து, பேச்சு என்று தொடரும் இந்தப் பயணம் நம் நாட்டிற்கானது. நம் பிள்ளைகளின் எதிர்காலக் கல்விக்கானது!

ஆம், நீட் தேர்வு என்னும் பலிபீடத்தை எதிர்த்தே. தமிழர் தலைவர், ஆசிரியர் இப்பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

பன்னிரெண்டு ஆண்டுகள் நம் பிள்ளைகள் பள்ளிகளில் படித்துப் பெற்ற மதிப்பெண்களை மதிப்பற்றனவாக்கி, அவர்களின் மருத்துவக் கல்லூரிக் கனவுகளுக்கு குறுக்கே நீட் என்னும் ஒரு பலிபீடத்தைக் கொண்டுவந்து நிறுத்தியுள்ளது இந்திய ஒன்றிய அரசு! அந்த நீட் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் எல்லோருக்கும் மருத்துவக்கல்லூரிகளில் இடம் கிஉடைத்துவிடும் என்பதும் கூட உறுதியில்லை. அவர்களின் தரப்பட்டியலைப் பொறுத்தே இடம் கிடைக்கும்.

நீட் என்னும் இந்தக் கொடுவாளை எதிர்த்துத் தமிழ் நாடே நிற்கிறது. குறிப்பாக இன்றைய தமிழ்நாடு அரசு அதனை விலக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலிமையாக முன்வைத்துள்ளது. பதவியேற்ற மறு மாதமான ஜூன் மாதமே, நீதிபதி ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்து, ஜூலை மாதத்தில் அந்தக் குழுவின் அறிக்கையைப் பெற்றது. உடனே செப்டம்பர் மாதம் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அதனை ஆளுநர் தமிழ்நாடு அரசுக்கே திருப்பி அனுப்பி விட்டார். மீண்டும் ஒருமுறை சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பிய பிறகும்,ஆளுநர் அசையாமல் இருக்கிறார். இந்த மக்கள் விரோதப் போக்கு மக்களிடையே ஒரு கோபத்தை உருவாக்கியுள்ளது.

கோப அலைகள் கொப்பளிக்க, ஆதரவு அலைகள் அணிதிரள, ஆசிரியரின் பயணம் நடைபோடுகின்றது. இந்த வயதிலும் அவரை இப்படி இயக்குகின்ற நெருப்பு எது? அய்யா பெரியார் அவர்களால் உருவாக்கப்பட்ட அணையா நெருப்பாம் சமூக நீதிதான் அது! அதனால்தான் 90 வயது என்னும் சிந்தனையைத் தூக்கி எறிந்துவிட்டு, அவர் ஓடிக்கொண்டே இருக்கிறார்!


அவரது ஓட்டம், நம் அனைவர்க்கும் ஊக்கம்!



*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## அங்கே சாமியார், இங்கே பெரியார்!

இனவெறி புத்த சாமியார்களைத் தலையில் தூக்கி ஆடிக்கொண்டிருக்கும் சிங்கள நாடு இன்று திவாலாகிக் கொண்டிருக்கிறது.

மக்கள் நலன் சார்ந்தத் திட்டங்கள், நாட்டின் வளர்ச்சி உள்ளிட்ட உள்கட்டமைப்புகளை வலுவாகக் கட்டமைப்பதை விட்டுவிட்டு, ஈழத் தமிழர்களுக்கு எதிரான இனவாதப் போரில் இராணுவத்திற்குப் பெருமளவு நிதியைச் செலவு செய்ததன் விளைவு, இன்று அமைதியற்ற வாழ்வோடு போராடுகிறார்கள் மக்கள். இது இலங்கை !

மதவெறிச் சாமியார்களை வைத்துக் கொண்டு இராமன் கோயில், கிருஷ்ணன் கோயில், இராமானுஜர் சிலை என்பதில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது மோடி அரசு.

பார்ப்பனர், உயர்ஜாதியர் தவிர்த்த இதரப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, கிராமப்புற மாணவர்களின் கல்வி மற்றும் மருத்துவக் கல்விகளை நுழைவுத் தேர்வு, நீட் தேர்வுகளால் சிதைத்துக் கொண்டிருக்கிறது பா.ஜ.க அரசு. நாட்டின் சொத்துகளை அம்பானி, அதானிகளுக்கு வாரி வாரிக்கொடுக்கும் மோடி அரசு, பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயுகளின் விலையேற்றத்தை வாரி வாரிக் கொடுக்கிறது மக்களுக்கு. இது இந்திய ஒன்றியம்!

மாநிலத்தின் உள்கட்டமைப்புகளைப் பலப்படுத்துகிறார் முதல்வர் ஸ்டாலின். மக்களின் – நாட்டின் வளர்ச்சி குறித்த சிந்தனை, அதற்கானத் திட்டங்களை உருவாக்கிக் கொண்டு அரசியந்திரங்களை முடுக்கி விட்டிருக்கிறார் அவர்.

கல்விக்கும், மருத்துவம், சுகாதாரத்திற்கும் முன்னுரிமை கொடுப்போம் என்று சொல்லும் ஸ்டாலின் உறங்குவது கொஞ்சம், உழைப்பது அதிகம். இது தமிழ்நாடு!

இலங்கையிலும், இந்தியாவிலும் சாமியார்களின் ஆதிக்கம்.

தமிழ்நாட்டில் பெரியாரின் ஆட்சி, அவ்வளவுதான் !

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,

தொலைபேசி: 044–2472 6408

# 2022ஆம் ஆண்டின் புதிய பொறுப்பாளர்கள் நியமனம்

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் அமைப்புக்குழு அளித்த, நான்கு மண்டல ஆய்வறிக்கையின் பரிந்துரையின்படிப் புதிய பொறுப்பாளர்கள் நியமிக்கப் படுகிறார்கள்.

### 1) செங்கல்பட்டு மாவட்டம் :

மாவட்டத் தலைவர் – செந்தாமரைக்கண்ணன்

மாவட்டச் செயலாளர்– இளமாறன்

மாவட்டப் பொருளாளர் – தாம்பரம் செந்தில்

மாவட்டத் துணைத்தலைவர் – முத்துக்குமார்

மாவட்டத் துணைச்செயலாளர் – இளங்கோ

### 2) திருவள்ளூர் மாவட்டம் (கிழக்கு):

மாவட்டத் தலைவர் – மோகன்ராம்

மாவட்டச் செயலாளர் – ஆ.ராஜு

மாவட்டப் பொருளாளர் – ஜெயபால்

### 3) திருவள்ளூர்: மாவட்டம் (மேற்கு):

மாவட்டத் தலைவர் – சூர்யா

மாவட்டச் செயலாளர் – ரகுபதி

மாவட்டப் பொருளாளர் – பாலாஜி

### 4) திருவண்ணாமலை மாவட்டம்:

மாவட்டத் தலைவர் – இராஜேந்திரன்

மாவட்டச் செயலாளர் – பன்னீர்செல்வம்

### 5) புதுவை மாநிலம்:

மாநிலத் தலைவர் – திராவிடமங்கை

மாநிலச் செயலாளர் – பரத்

மாநிலப் பொருளாளர் – யாழ்அமுதா

மாநில மகளிரணி அமைப்பாளர் – அஸ்வினி

### 6) கடலூர் மாவட்டம்:

வடலூர் நகரத் தலைவர் – நடராசன்

வடலூர் நகரச் செயலாளர் – குருநாதன்

### விருத்தாச்சலம் வட்டம்:

**இருப்புக் கிராமக்கிளை**

தலைவர் – சக்திவேல்

செயலாளர் – தமிழ்க்கனல்

பொருளாளர் – திவாகர்

**சுப.வீரபாண்டியன்**
பொதுச் செயலாளர்.

# மாநிலக் கட்சிகள் பலம் பெறுவது

# திராவிட மாடலே!

**சிற்பி செல்வராஜ்**



இந்திய ஒன்றிய அரசின் நரேந்திர மோடி அமைச்சரவையில் மிக முக்கியமான அமைச்சர்களில் ஒருவராக இருப்பவர் நிதின்கட்கரி.

சமீபத்தில் ஒரு விழாவில் பேசும் போது காங்கிரஸ் கட்சி பலம் பெற வேண்டும் என்று தாம் விரும்புவதாகக் கருத்துத் தெரிவித்து இருந்தார்.

அதற்கு அவர் சொன்ன காரணம்தான், ஆடு நனைகிறதே என்று ஓநாய் கதறி அழுத கதையாக இருந்தது.

ஏனெனில் காங்கிரஸ் பலம் மிக்க எதிர்க்கட்சியாக வரவில்லை எனில் மாநிலக்கட்சிகள் பலம் பெற்று விடுமாம். அச்சப்படுகிறார் அவர்.

மாநிலக்கட்சிகள் பலமாக இருக்கும் மாநிலங்களில் தேசியக்கட்சிகளின் வளர்ச்சியும், வலிமையும் குறைவாகத்தான் இருக்கும். இதற்குப் பல்வேறுபட்ட காரணங்கள் உண்டு.

குறிப்பாக மாநில சுயாட்சியை வலியுறுத்துகின்ற தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் மாநிலக் கட்சியாக வலிமை பெற்று இருப்பது நிதின்கட்கரி போன்றவர்களுக்குப் பயத்தையும், கலக்கத்தையும் உருவாக்கி இருக்கிறது.

பல்வேறுபட்ட இனம் ,மொழி, கலாச்சாரம் கொண்ட மக்கள் வாழும் இந்திய ஒன்றியத்தில் இவர்கள் பேசும் இந்தி (சமஸ்கிருதம்) ஒரே மொழி , ஒரே நாடு, ஒரே சட்டம் என்ற ஆர்.எஸ்.எஸ் - இன் முகமூடி பா.ஜ.கவின் கொள்கையாக முன்னெடுப்பதை தி.மு.கழகம் கடுமையாக எதிர்க்கிறது.

மாநிலக்கட்சிகள் பலமாக இருக்கும் மாநிலங்களில் இது போன்ற நிலை ஏற்பட்டு விடக் கூடாது என்பதனால் மாநிலக் கட்சிகள் வலிமை பெற்று விடக் கூடாது என்கிறார் நிதின் கட்கரி. இது அவரிடம் இருக்கும் அச்சத்தைக் காட்டுகிறது.

இந்திய ஒன்றியத்தில் காங்கிரஸ் கட்சி தேய்ந்து வருகிறது என்பது உண்மைதான்.

> “
>
> **மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற தி.மு.கழகத்தின் கொள்கை முழக்கம் நடைமுறையில் உண்மையாகிவிடும் என்ற கலக்கம் நிதின் கட்கரியின் பேச்சில் தெரிகிறது**

மாநிலங்களின் கட்சிகள் பலம் பெற்று விட்டால் மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற திமுகழகத்தின் கொள்கை முழக்கம் நடைமுறையில் உண்மையாகிவிடும் என்ற கலக்கம் நிதின் கட்கரியின் பேச்சில் தெரிகிறது.

அது மட்டுமன்று, கூட்டாட்சி முறைக்கு எதிராக மாநிலக் கட்சிகளின் மீதான பா.ஜ.கவின் வன்மத்தைக் கொட்டி இருக்கிறார் நிதின்கட்கரி.

ஏதோ காங்கிரஸ் கட்சியின் மீது அதிக அக்கறையுள்ளவர் போல அவர் காட்டிக் கொள்வது முதலைக் கண்ணீராகத் தெரிகிறது.

காங்கிரஸ் கட்சியின் எதிர்காலம் எனக் கருதப்படும் ராகுல் காந்தி மாநிலக் கட்சிகளைக் கூட்டணிக்குள் இணைத்து கூட்டாட்சித் தத்துவத்திற்கு வலு சேர்த்து விடுவாரோ என்ற அச்சமும் தெரிகிறது. ஏன் இந்த அச்சம் ?

காரணம் “திராவிட மாடல் - ஆட்சி”,

“திராவிட மாடல் -அரசியல்” ,

“திராவிட மாடல் - மு.க.ஸ்டாலின்”. ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian